நகர்மன்றம்
உதகமண்டலம்
–05-2019.

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற மே **–2019–**ம் மாத அவசரக்கூட்டம் வருகிற **–05–2019** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**9** கீரின் பீல்டு பகுதியில் உள்ள வீடுகளுக்கு பாதாளச் சாக்கடை வழங்க அமைக்கப்பட்ட பிளாஸ்டிக் குழாய் பழுதடைந்து உள்ளதால் இந்த பழுதடைந்த குழாய் வழியாக அதிக அளவு கழிவு நீர் வெளியேறுகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு துார் நாற்றம் வீசுகிறது. இதனால் அப்பகுதி பொது மக்கள் நடைபாதையில் நடக்க முடியாமல் மிகவும் சிரம்மப் படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் பழுதடைந்து உள்ள குழாய்யை கழற்றி விட்டு அதற்கு பதிலாக புதிய MS குழாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**0.85/–** இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (குடிநீர் நிதி)

**அலுவலக குறிப்பு :–**
**குடிநீர் நிதி**
**(ந.க.எண்.இ5/4441/2019)**
**தீர்மானம் எண்: 1393 அனுமதி வழங்கப்பட்டது.**

**2.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஐயப்பன் கோவில் லிபர்ட்டி தியேட்டர் பகுதி, டவுன் பஸ் நிலையம், அரசு மருத்துவமனை சாலை, போலிஸ் குவார்ட்ரஸ் அருகில், கோஷி பில்டிங், சர்ச் ஹில் சபயர் கிராண்ட், ஆனந் ஆயில் டிப்போ ஆகிய இடங்களில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் சாலைகளில் வழிந்தோடுவதோடு துர்நாற்றம் வீசுகிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. மேலும், பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**4.95** இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
**குடிநீர் நிதி**
**(ந.க.எண்.இ5/4128/2019)**
**நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் எண்: 1394 அனுமதி வழங்கப்பட்டது.**

**3.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.32 எல்ஹில் குமரன் நகர் செல்லும் Paverblock சாலையில் உள்ள மேன்ஹோல் மற்றும் பைப்லைன் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் ஆனது Paverblock சாலையில் சென்று கொண்டு இருக்கிறது. இதனால் இப்பகுதியில் குடியிருப்பவர்களுக்கு துர்நாற்றம் வீசுவதுடன் இச்சாலையை பயன்படுத்தும் வாகன ஓட்டிகள் வழுக்கி விழுந்து விடும் நிலை உள்ளது. மேலும் இந்த கழிவு நீரால் அப்பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு நோய் தொற்றும் அபாயமும் உள்ளது. எனவே மேற்கண்ட Paverblock சாலையில் உள்ள மேன்ஹோல் மற்றும் பைப்லைன் ஆகியவற்றை புதிதாக மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்ற முன் அனுமதி வழங்கப்படுகிறது.**
**(ந.க.எண்.இ5/3555/2019)**

**தீர்மானம் எண்: 1395 அனுமதி வழங்கப்பட்டது.**

**4.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17–ல் புட்சர் தெரு பகுதியில் பாதாள சாக்கடை தொட்டிகள் மற்றும் குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அருகிலுள்ள வீடுகளுக்கும் அடிக்கடி புகுந்து விடுவதாலும் நடைபாதையில் கழிவுநீர் வழிந்தோடுவதாலும் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– குடிநீர் நிதி**

**அலுவலக குறிப்பு:–**

**நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.இ5/3558/2019)**

**தீர்மானம் எண்: 1396 அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கோடப்பமந்து கால்வாயின் உட்பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பட்டு வருகிறது. சேரிங்கிராஸ் பகுதி கோடப்பமந்து கால்வாயில் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் பாதாள சாக்கடை குழாய்களில் செல்ல வழியில்லாமல் கோடப்பமந்து கால்வாயில் செல்லும் போது கழிவுநீர் உதகை ஏரியில் நேரடியாக கலக்கும் வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதியும் உதகை ஏரியை பாதுகாக்கும் பொருட்டும் பழுதடைந்துள்ள தொட்டிகள் மற்றும் குழாய்களை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.24.50 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:– குடிநீர் மற்றும் வடிகால் நிதி**

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.இ5/3556/2019)**

**தீர்மானம் எண்: 1397 அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் குடியிருப்பு அருகில் உள்ள கார் ஷெட் மிகவும் பழுதடைந்துள்ளதால் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்துள்ள பழைய உபயோகமற்ற கார் ஷெட் இடித்து மேற்கண்ட இடத்தில் புதிய கார் ஷெட் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**8.80/–** இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:– பொது நிதி**

**அலுவலக குறிப்பு:–**

**நகராட்சி பொது நிதிகளின் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4127/2019)**

**தீர்மானம் எண்: 1398 அனுமதி வழங்கப்பட்டது.**

**7.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் **2019–2020**ம் ஆண்டுகளில் நடைபெறவுள்ள பணிகள் சம்பந்தமாக மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலர், மாவட்ட ஒப்பந்தப் புள்ளி செய்திமலர் மற்றும் தினசரி நாளிதழ்களில் ஒப்பந்தபுள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது. எனவே தினசரி நாளிதழ்களில் ஒப்பந்தபுள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்ய **(2019–2020)**ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**10.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:– வருவாய் மூலதன நிதி**

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ1/3542/2019)**

**தீர்மானம் எண்: 1399 அனுமதி வழங்கப்பட்டது.**

**8.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**30**க்கு உட்பட்ட ஆர்.கே.புரம் பகுதியில் அமைந்து உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு வர்ணம் பூசப்பட்டு பல வருடங்களுக்கு மேல் ஆகி உள்ளது. தற்போது பெய்த மழையினால் அனைத்து வகுப்பறை பகுதியிலும் வெளிப்பகுதியிலும் உள்ள வர்ணம் அனைத்தும் சேதமடைந்து உள்ளது. இதனை சரிசெய்து வர்ணம் பூச நகர்மன்றத்தின் மூலம் தீர்மானம் எண்.**1018** நாள்.**31.08.2018**ன் படி ரூ.**9.00/–** இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு உள்ளது. ஆனால் பணி நடைபெறும் போது கூடுதலாக சில Conerate பணிக்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ஆனால், மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட தொகைக்கு மிகாமல் SORல் உள்ள தொகைக்கு மிகாமலும், பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. எனவே, கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட பணிக்கு சேர்த்து திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி அளிக்கலாம்.**

**தீர்மானம் எண்: 1400 அனுமதி வழங்கப்பட்டது.**

**9.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 தோப்பன் லைன் பகுதியில் உள்ள மழைநீர்க் கால்வாய் முற்றிலும் சேதமடைந்து தண்ணீர் செல்ல வழியில்லாமல் கழிவுநீர் தேங்கி நிற்கிறது. இதனால் மழைக் காலங்களில் மழைநிர் உடன் சேர்ந்து கழிவுநீர் அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. இதனை தடுக்க மழைநீர்க் கால்வாய் அமைக்க நகர்மன்ற தீர்மான எண்.326 நாள்.19.02.2016ல் அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. ஆனால், தற்போது தயாரிக்கப்படும் மதிப்பீட்டு உடன் GST சேர்த்து மதிப்பீடு தயாரிக்க வேண்டும். ஆனால், இந்த மதிப்பீடு தயாரிக்கும் போது மதிப்பீட்டு உடன் GST சேர்க்கப்படவில்லை. எனவே, இப்பணிக்கு உண்டான மதிப்பீட்டு உடன் GST சேர்த்து வழங்க வேண்டும். இதற்கான GST தொகை ரூ.30,000/– ஆயிரத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி அளிக்கலாம்.**

**தீர்மானம் எண்: 1401 அனுமதி வழங்கப்பட்டது.**

**தனி அலுவலர், மற்றும்**
**ஆணையாளர்**
**உதகமண்டலம் நகராட்சி.**